ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2040/42 - 2017 ඔක්තෝබර් මස 13 වැනි සිකුරාදා - 2017.10.13
*2040/42 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: டபிள்யூஎல்பி/எல்ஏஎன்/எப்எல்டீஓ4/ஏசீகியூ/08.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/6/2013/எச்டபிள்யூ/681.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெலிபிடிய பிரதேச செயலாளர் பிரிவில், வலிகம் கோரலே தெற்கு சிறு பிரிவில், இல. 375டீ பெரலேலிய கிராம அலுவலர் பிரிவில் உள்ள, பெரலேலிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதி சார்பாக மாத்தறை நில அளவை அத்தியட்சகரினால் 2017.05.02 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைப்பட இல. 2680 கொண்ட, 0.0372 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகள் விஸ்தரிப்பதற்காக எடுக்கப்படுகின்றது (காணித் துண்டுகள் 02):

*1.* **துண்டு இல. *1***
காணியின் பெயர்: மெதகேல்ல கும்புர; விபரம்: சீமெந்து காண் மற்றும் திறந்த பயனற்ற நிலம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: (எடுக்கப்பட்ட ஆ.வ. இல. மார 1935 இன் 14 ஆவது காணித் துண்டின் பகுதி); விஸ்தீரணம்: 0.0186 ஹெக்டயார்.

*2.* **துண்டு இல. *2***
காணியின் பெயர்: மெதகேல்ல கும்புர; விபரம்: சீமெந்து காண் மற்றும் திறந்த பயனற்ற நிலம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: டெரம்ப கங்கானம்கே விஜித லீலானந்த சிரிவர்தன சில்வா, அத்கென்தஹேன, பெரலேலிய, வெலிகம மற்றும் சிசிலியானா இலிப்பிலி, வெவஹேன வத்தை, பெரலேலிய, வெலிகம; விஸ்தீரணம்: 0.0186 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு வெலிபிடிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

துஷாரி பி. சூரியஆரச்சி,
பிரதேச செயலாளர்,
வெலிபிடிய.

பிரதேச செயலகம்,
வெலிபிடிய,
2017, ஒற்றோபர் 11.

*10 - 1556*

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 3/2/3/10/258.

10.10.2016 ஆந் திகதிய 1998/09 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் காணி எடுத்தல் சட்டம் 7 ஆம் பிரிவின் படியான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கம். 4007 இல் பக்கங்கள் 3ஏ இல் துண்டு இல. 07 மற்றும் 08 உப பிரிவாக்கப்பட்டு துண்டு இல. 25, 26 மற்றும் 27 எனப் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

**துண்டு இல. 25**

காணியின் பெயர்: கஹட்டகஹவத்தை; விபரம்: தோட்டம், சீமேந்தால் கட்டப்பட்ட கிணறு ஒன்று, 20 வருட வயதிலான தென்னை மரங்கள் 21, பலா மரம் 01 மற்றும் மாஹோகனி மரங்கள் 05; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஜே. சி. ஜயரத்ன, இல. 09, தாறளுவ, பெம்முல்ல; விஸ்தீரணம்: 0.1423 ஹெக்டயார்.

**துண்டு இல. 26**

காணியின் பெயர்: - ; விபரம்: வீதி; உரிமைகோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஜே. சி. ஜயரத்ன, இல. 09, தாறளுவ, பெம்முல்ல மற்றும் எம். பீ. ஜயரத்ன, இல. 49/12, பராக்கிரம வீதி, கம்பஹா; விஸ்தீரணம்: 0.0100 ஹெக்டயார்.

**துண்டு இல. 27**

காணியின் பெயர்: கஹட்டகஹவத்தை; விபரம்: தோட்டம், 25 வருட வயதிலான தென்னை மரங்கள் 23 மற்றும் பலா மரங்கள் 10; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: எம். பீ. ஜயரத்ன, இல. 49/12, பராக்கிரம வீதி, கம்பஹா; விஸ்தீரணம்: 0.1728 ஹெக்டயார்.

டீ. எம். ரத்நாயக்க,
பிரதேச செயலாளர்,
அத்தனகலை.

பிரதேச செயலகம்,
அத்தனகலை,
2017, செத்தெம்பர் 08.

10 – 1557

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.